# நம்மாழ்வார் அருளிச் செய்த
# திருவாய்மொழி
# நான்காம் பத்து

## இரண்டாம் திருவாய்மொழி - பாலனாய்
## காலதேசங்களால் விலகி இருக்கையால் மிக அரிதான பகவதநுபவங்களை ஆசைப்பட்டு நைகின்ற தலைமகளின் தன்மை கண்டு தாய் இரங்கிக் கூறும் பாசுரம்

** பாலனாய் * ஏழ் உலகுண்டு பரிவின்றி *
ஆலிலை * அன்னவசம் செய்யும் அண்ணலார் **
தாள் இணை மேல் அணி * தண்ணந்துழாய் என்றே
மாலுமால் * வல்வினையேன் * மடவல்லியே 1

வல்லி சேர் நுண் இடை * ஆய்ச்சியர் தம்மொடும் *
கொல்லைமை செய்து * குரவை பிணைந்தவர் **
நல் அடி மேல் அணி * நாறு துழாய் என்றே
சொல்லுமால் * சூழ் வினையாட்டியேன் பாவையே 2

பா இயல் வேத * நன்மாலை பல கொண்டு *
தேவர்கள் மா முனிவர் * இறைஞ்ச நின்ற **
சேவடி மேல் அணி * செம்பொன் துழாய் என்றே
கூவுமால் * கோள் வினையாட்டியேன் கோதையே 3

கோதில வண்புகழ் * கொண்டு சமயிகள் *
பேதங்கள் சொல்லிப் * பிதற்றும் பிரான் பரன் **
பாதங்கள் மேல் அணி * பைம்பொன் துழாய் என்றே
ஓதுமால் * ஊழ் வினையேன் தடந்தோளியே 4

தோளி சேர் பின்னை பொருட்டு * எருது ஏழ் தழீஇக்
கோளியார் * கோவலனார் * குடக் கூத்தனார் **
தாள் இணை மேல் அணி * தண்ணந்துழாய் என்றே
நாளு நாள் * நைகின்றதால் * என்தன் மாதரே 5

மாதர் மா மண் மடந்தை பொருட்டு * ஏனமாய் *
ஆதி அங்காலத்து * அகல் இடம் கீண்டவர் **
பாதங்கள் மேல் அணி * பைம்பொன் துழாய் என்றே *
ஓதுமால் எய்தினள் * என்தன் மடந்தையே 6

மடந்தையை * வண்கமலத் திரு மாதினை *
தடங்கொள் தார் மார்பினில் * வைத்தவர் தாளின் மேல் **
வடங்கொள் பூன் தண்ணந்துழாய் மலர்க்கே * இவள்
மடங்குமால் * வாணுதலீர்! என் மடக் கொம்பே 7

கொம்பு போல் சீதை பொருட்டு * இலங்கை நகர் *
அம்பு எரி உய்த்தவர் * தாள் இணை மேல் அணி **
வம்பவிழ் தண்ணந்துழாய் மலர்க்கே * இவள்
நம்புமால் * நான் இதற்கு என் செய்கேன்? * நங்கைமீர்! 8

நங்கைமீர்! நீரும் * ஓர் பெண் பெற்று நல்கினீர் *
எங்ஙனே சொல்லுகேன்? * யான் பெற்ற ஏழையை **
சங்கு என்னும் சக்கரம் என்னும் * துழாய் என்னும் *
இங்ஙனே சொல்லும் * இராப் பகல் என் செய்கேன்? 9

என் செய்கேன்? என்னுடைப் பேதை * என் கோமளம் *
என் சொல்லும் * என் வசமும் அல்லள் நங்கைமீர்! **
மின் செய் பூண் மார்பினன் * கண்ணன் கழல் துழாய் *
பொன் செய் பூண் மென் முலைக்கு என்று * மெலியுமே 10

** மெலியு நோய் தீர்க்கும் * நம் கண்ணன் கழல்கள் மேல் *
மலி புகழ் வண் குருகூர்ச் * சடகோபன் சொல் **
ஒலி புகழ் ஆயிரத்து * இப்பத்தும் வல்லவர் *
மலி புகழ் வானவர்க்கு ஆவர் * நற்கோவையே 11

**ஆழ்வார் திருவடிகளே சரணம்**

---